# வெளி

மாற்றத்தின் ஆரம்பம்...



"பல வேடிக்கை மனிதரை போலே
நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?"

புரட்டாதி 2016

20/-

- மனிதநேயம் மறந்த உலகு
- தாய்மொழி - சிறுகதை
- கள்ளிக்குளம் - ஒரு பார்வை
- அப்பா ஓர் திரைப்பார்வை....
- ஓர் வரலாற்று ஆய்வு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணினிகள் மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள்...**

முன்னணி நிறுவனங்களின் தயாரிப்புகள் உட்பட கணினிகள், மடிக்கணினிகள், மென்பொருட்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் போன்ற அனைத்தும் பெற்றுக்கொள்ள...

**கணினி திருத்தம் மற்றும் சேவைகள்...**

உங்கள் உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை நம்பிக்கையுடன் திருத்திக்கொள்ளவும் மேம்படுத்திக்கொள்ளவும்...
காட்சியறைக்கு எடுத்து வாருங்கள் அல்லது எம்மை அழையுங்கள்....

**கணினி வலையமைப்பு நிறுவுதல் மற்றும் பராமரிப்பு சேவை**

கணினி வலையமைப்புகளை செவ்வனே வழவமைத்து நிறுவிக்கொள்ளவும், வழங்கிகளையும் உபகரணங்களையும் பராமரிக்கவும், சரிசெய்யவும்...

**வலைத்தள வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு**

வலைத்தளங்கள் வடிவமைத்தல், வலையேற்றுதல், ஆட்களபெயர்ப்பதிவு மற்றும் வலைவழங்கல் சேவை வழங்குனர்.

CELEBRATING 12 YEARS IN BUSINESS

Find us on Facebook
facebook.com/clabtec



**வாடிக்கையாளர் சேவை**
**0777 104 704**

# சி-லாப் | C LAB

கணினிக் காட்சியறை

**56, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.**

தொலைபேசி: 024 222 4809 | தொலைநகல்: 024 222 6636
மின்னஞ்சல்: info@clabtec.com | தளம்: www.clabtec.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து....

பரந்துபட்ட இவ்வுலகின் தற்போதைய 21ம் நூற்றாண்டில் வியக்கத்தக்க வகையில் பல்வேறுபட்ட தொழல்நுட்பங்கள் வளர்ந்திருந்தாலும் மனிதனின் சிந்தனைத் திறனை அதிகரிக்கும் விடயமாக கருதப்படுவது வாசிப்பு ஆகும்.

ஆனால் இன்றைய கால கட்டத்தில் வாசிக்கும் தன்மையற்ற ஓர் இளைய சமுதாயத்தையே நாம் எதிர்கொள்ள நேரிடுகிறது. படைப்புக்கள் பல வந்தாலும் ஒரு சில படைப்புக்கள் மாத்திரமே மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றது. என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

"வெளி" இளைஞர் செயற்பாட்டாளர்களின் ஒவ்வொரு முயற்சிகளும் அடுத்த கட்ட சமுதாயத்திற்கான ஓர் வழிகாட்டல்களாகவே அமைந்துள்ளது. அந்த வகையில் இச் சஞ்சிகையும் இளைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


**ஆலோசகர்**
இரா.புஷ்பகாந்தன்
(பேராசிரியர்)

**முதற்பதிப்பு**
புரட்டாதி 2016

**இதழாசிரியர்கள்**
த.பமீகரன்
ஜெ.சுலக்ஷன்

**விளம்பர முகாமை**
நி.முகிந்தன்

**பக்க வடிவமைப்பு**
க.கிருஷாந்
ப.லதீப்
assistia

**அச்சுப்பதிப்பு**
பகீரதன் அச்சுப்பதிப்பகம்
கற்குழி, வவுனியா.
024 222 1491




**தொடர்புகளுக்கு**
024 2050492
veliyouth2016@gmail.com
#187/10, ஆலடி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

ஏன் என்னை திட்டுகிறாய்
திட்டாதீர்கள்
விடியலின் தலை நகராய் கிடந்த
கிளிநொச்சியில் கிளர்ந்துள்ளது என் சின்னம்
என்ன செய்ய கிழிப்பதும் துளைப்பதும் என் தொழில்
ஒய்யாரமாய் ஓங்கி சத்தமிடும் ஒரு கூட்டம்
என்ன வெற்றியின் அடையாளமாக்கி முள்ளியில் முடிவுக்கு கொண்டுவந்தது
இழந்து போன தேசத்தில் இறுதியாய் மூச்சு விட்டதாம்
சில கூட்டம் எனக்கு தெரியாது - எனக்கு எதுவும் தெரியாது
கழுத்தில் காலணி வைத்து
தரையில் தலை அமத்தி என்னை
எவனுள்ளோ செலுத்திய போது -நான்
தலையை துளைத்த வேகத்தில்
தரைக்குள் நுழைந்தேன் எனக்கு எதுவும் தெரியாது

தரையில் கிடத்திய ஒருவனின்
நெஞ்சில் நுழைந்த போது
பிரிவது உயிர் என்று தெரிந்தது
பிரிவினை எனக்கு தெரியாது

சிலரின் மார்பை துளைத்தபோது
மானிடனா மங்கையரா என்று
எனக்கு தெரியாது யாரோ
எதுவும் எனக்கு தெரியாது
யுத்தத்தில் எத்தனையோ சத்தங்கள்
செய்ய சத்தமில்லாமல் தானே
இருந்தீர் இப்போது கேட்டால்
எனக்கு எதுவும் தெரியாது

துரோகிகளின் தலையை துளைத்தது
உண்மைதான் -எனினும்
துரோகி ஆகாததால் துளைத்தேன் சிலரை
உமக்கு தெரியுமா

சத்தங்கள் கேட்டது உண்மைதான் -என்
சப்தம் முடித்த பின் சத்தங்கள்
எதுவுமில்லை
நானும் தான் எரிந்து போனேன்
எனக்கு எதுவுமே தெரியாது

என் உறைகளுக்கு உயிர் கொடுத்தவர்கள் கூட
உயிர் இல்லாமல் கிடந்தனர் அங்கே
எனக்கு எதுவும் தெரியாது

உறை என்னை ஊக்குவித்தது - அவன்
மார்பிலும் தலையிலும்
பாய்ந்து போ என
உறையை கேட்டால் உறை
உரைத்தவன் விரலைக்கேட்கச்சொல்கிறது
உரைத்தவன் உணர்ச்சி இல்லாதது போலல்லவா இருக்கிறான்

கேள்வியும் அங்கே
பதிலும் அங்கே என்றால்
யாருக்கு பதில் சொல்ல அவன்
முடிவில்லை
மறுபடி என் அண்ணனோ தம்பியோ
யாரின் தலையில் பட்டு
தரையில் சிரிப்பான் ....
நான் சன்னம்.....

-நி.சேரன்

மாற்றத்தின் ஆரம்பம் நாம்.
பரந்த இவ் உலகத்தில் சுதந்திர பறவைகளாய்
பறந்திடுவோம்.
ஊர் எதிர்த்து நின்றாலும் உண்மையென்றால்
உரக்கச்சொல்வோம்.
பாரெங்கும் பரந்து நாம் இப்பிரபஞ்சத்தையும்
மேவி நிற்போம்.
பழமையை பேணுவோம் இருப்பினும்
புதுமையாய் வாழ்ந்திடுவோம்.
இளைஞர் எனும் நாமம் கொண்டு இவ்
உலகினையே ஆண்டிடுவோம்.
மாறி வரும் இவ் உலகினிலே
மாற்றத்தின் ஆரம்பம்
நாமல்லவோ....

-த.கரன்

பெண் பார்க்கும்
படலம் பிரமாதமாய் முடிந்தது - அவள்
எழுந்து நடக்க முயன்ற போது
கொஞ்சமாய் மிக மிக கொஞ்சமாய்
வளரமறுத்து - முழுதாய் ஊன்ற
முடியாத வலது கால் அங்கே
ஊன்றியது.

மணமகன் சந்தையில்
விலையேற்றம்! பெண்ணுக்கு
காலில் ஊனம் கௌரவப்பிச்சை
இன்னும் அதிகம் வேணும்....!

-துர்க்கா-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையை வளர்க்க சில வழிகள்....

விடியும் முன்னால் எழுந்து விடுங்கள் ஒரு நாளின் அலுவல்களை முற்கூட்டியே திட்டமிடுங்கள்

வாரம் மூன்று முறையாவது உடற்பயிற்சி செய்யுங்கள் முடிந்தவரை நடந்து செல்லுங்கள்

எக்காரணம் கொண்டும் காலை உணவை தவிர்க்காதீர்கள் ஆரோக்கியம் தராத உணவுகள் எவ்வளவு சுவையாக இருந்தாலும் உண்ணாதீர்கள்

புன்னகை முகமும் இதமான பேச்சும் உங்கள் இயல்புகளாக இருக்கட்டும்

மாதம் ஒரு புத்தகமாவது படியுங்கள்

சிறுகுறிப்போ கடிதமோ கட்டுரையோ பிழையில்லாமல் எழுதுவதில் கவனம் செலுத்துங்கள்

நிற்கையில் நேராக நில்லுங்கள் பேசுகையில் கண்ணைப்பார்த்து பேசுங்கள்

உங்களுக்கு என்ன வயதானாலும் பரவாயில்லை விருப்பமான துறையில் நடக்கும் பயிற்சி வகுப்பில் பங்கெடுங்கள்

உங்கள் திறமையை நீங்களே விபரித்துக்கொள்ளாதீர்கள் உரிய நேரத்தில் நிரூபியுங்கள்

மாதம் ஒருமுறையாவது உங்கள் தகுதிகளையும் தவறுகளையும் பட்டியல் இடுங்கள்

வருமானத்திற்கான வழி மிகவும் முக்கியம் அதில் எந்த சமரசமும் செய்து கொள்ளாதீர்கள்

உங்கள் வாழ்வின் ரகசிய அம்சங்கள்முடிந்தவரை குறைவாக இருக்கட்டும்

குடும்பம் என்பதை கடந்து பொது அமைப்பு எதிலாவது ஈடுபடுங்கள்

உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளையும் பழக்கங்களயும் மற்றவர் மேல் திணிக்காதீர்கள்

உங்கள் நேரத்திற்கும் மற்றவர் நேரத்திற்கும் உரிய மரியாதை கொடுங்கள்

முடிந்தவரை கடன்களை கட்டிவிடுங்கள் வேண்டாத செலவுகளை நிறுத்துங்கள்

ஒருவர் இல்லாதபோது அவருடய சிறப்பம்சங்களை பேசுங்கள்

அரட்டைப்பேச்சுக்களையும் அபவாதங்களையும் ஊக்குவிக்காதீர்கள்

மேடைக்கூச்சமில்லாமல் இருங்கள்.

மற்றவரின் தவறுகளை மன்னியுங்கள் ஒருபோதும் மறக்காதீர்கள்

உங்களிடம் இல்லாத தகுதிகள் இருப்பதாக நம்பவோ நம்பவைக்கவோ முயலாதீர்கள்

உங்கள் வாழ்க்கை நன்றாக அமைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில....

## தாழ்வு மனப்பான்மையை போக்க சில வழிகள்

- உங்களால் எதுவும் முடியாது உங்களுக்கு எதுவும் தெரியவில்லை என்று யாரேனும் சொன்னாலும் அதை விரைவில் நிறுத்திக்கொண்டு முடித்துக் காட்ட வெறித்தனமாய் முயற்சி செய்யுங்கள்
- என் வாழ்க்கை சோகம் நிறைந்தது என்று நினைக்காதீர்கள் எல்லாம் நிறைவாய் இருக்கும் வாழ்க்கை இங்கு யாருக்குமே அமைவதில்லை என்பதே உண்மை
- உங்களுக்கு எதுவும் தெரியாது எதிரில் நிற்பவருக்கு எல்லாமே தெரியும் என்று ஒரு போதும் நினைக்காதீர்கள் இந்த எண்ணம் இருந்தால் நீங்கள் சொல்ல வந்ததை சரியாக தடுமாற்றம் இன்றி சொல்லி முடிக்க முடியாது
- கேள்வி கேட்பதற்கு உங்களை முன் நிறுத்துவதற்கும் மொழி புலமை அவசியம் என்று நினைக்காதீர்கள் உலகில் சரியாக சிந்திக்க வைத்த கேள்விகளை கேட்ட நிறைய பேர் மொழிப்புலமை இல்லாமல் தங்களுக்கு தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு தங்கள் கேள்விகளை சரியாக புரிய வைத்தவர்கள்
- அழும் போது தனியாக அழுங்கள் நீங்கள் அழைத்தாலும் சேர்ந்து அழ இங்கு யாரும் வரப்போவதில்லை என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள் கண்ணீரில் துக்கத்தை கரைத்து தூர எறிந்துவிட்டு முன் செல்லுங்கள்

# பெரும் புள்ளி..!!!

அமெரிக்க அதிபர் 'ஒபாமா' வுக்கு நெடுநாள் ஆசை கார் ஓட்டவேண்டுமென்று. ஒருநாள் ஓட்டுனரை தன்னுடன் அமரவைத்து ஓட்டிச் சென்றார்.ஓட்டுனர் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் ஒபாமா அதிவேகத்தில் சென்றதால், காவல்துறையிடம் மாட்டிக் கொண்டார்.அபராதம் விதிக்கப் போவதாக காவலர் சொல்லவே,

ஒபாமா:- ' நான் யார் தெரியுமா?

'என்று கேட்டார்.'எல்லாம் தெரியும்....

கம்மா தொனதொனக்காமல் சற்றுப் பொறுங்கள்.. கேட்டுச் சொல்கிறேன்' என்ற காவலர் மேலிடத்தோடு தொடர்பு கொண்டார்..காவலர்–ஒரு பெரும்புள்ளியின் கார் வேகக் கட்டுப்பாட்டை மீறிவிட்டது.மேலிடம்–யார் அந்தப் பெரும்புள்ளி.. மேயரா..?

காவ:–இல்லை..

மேலி:–கவர்னரா..?

காவ:–இல்லை..

மேலி:–நம் அதிபரா..?

காவ:–இல்லை அவரைவிட அதிகம்..!

மேலி:–பதறி இருக்கையை விட்டு எழுந்தவாறே..? வேறு யார் சொல்லித் தொலை..!

காவ:–யாரோ தெரியவில்லை..! ஆனால் ஒன்று..? நம் அதிபரையே ஓட்டுனராக வைத்திருக்கும் அளவுக்கு பெரும் புள்ளி ..!!!

# அமைதி....

ஒரு நாள் ஒரு விவசாயி தன் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை மோட்டார் கொட்டகையில் தொலைத்து விட்டார். அது அவரது திருமணத்தின் போது மனைவி அவருக்கு ஆசையாக பரிசளித்த கைக்கடிகாரம். அவர் அந்த இடத்தை சுற்றி தேடி பார்த்துவிட்டார். அவருக்கு அந்த கைக்கடிகாரம் கிடைக்கவில்லை. அவ்விடத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர். அவர்களை அழைத்து, 'என் கைகடிகாரம் தொலைந்துவிட்டது. அதை கண்டு பிடித்து கொடுப்பவர்களுக்கு நல்ல பரிசு ஒன்று கொடுப்பேன்' என்றார். சிறுவர்கள் ஆர்வமுடன் மோட்டார் கொட்டகைக்குள் சென்று தேட ஆரம்பித்தனர்.

சிறிது நேரத்தில் அவர்கள் வெளியே வந்து, 'எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டனர். ஒரு சிறுவன் மட்டும் மீண்டும் வந்து, 'எனக்கு இன்னொரு வாய்ப்பு கொடுங்கள். நான் தேடி தருகிறேன்' என்றான்.விவசாயியும்,'சரி! நீ போய் தேடிப்பார்'என்றார்.மோட்டார் கொட்டகைக்குள் சென்ற சிறுவன் சிறிது நேரத்தில் கை கடிகாரத்துடன் வெளியே வந்தான். அதை பார்த்த விவசாயி ஆச்சரியத்துடன், 'எப்படி உன்னால் மட்டும் கண்டுபிடிக்க முடிந்தது?' என்று கேட்டார். 'நான் உள்ளே சென்று தரையில் அமைதியாக உட்கார்ந்து காதுகளை கூர்மையாக்கி கேட்டேன். எந்த திசையில் இருந்து டிக் டிக் சத்தம் வருகிறது என்று. பிறகு சுலபமாக கண்டுபிடித்து எடுத்து வந்தேன்' என்றான்.

நீதி: அமைதியானமனநிலையில்எந்தஒருகாரியத்தைசெய்தாலும்அது வெற்றிகரமாக முடியும்....

## வாழ்கையில் மூன்று கசப்பான உண்மைகள்

- இளமையில் நிறைய நேரம் கிடைக்கும் எனர்ஜி நிறையவே இருக்கும் ஆனால் பணம் மட்டும் கிடைக்காது
- நடுத்தர வயதில் நிறைய பணம் இருக்கும் எனர்ஜியும் இருக்கும் ஆனால் நேரம் மட்டும் இருக்காது
- முதிர்ந்த வயதில் நேரம் இருக்கும் பணமும் இருக்கும் எனர்ஜி இருக்காது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மொழி (சிறுகதை)

கிளிநொச்சியின் பரந்து விரிந்த வீதியிலே பரபரப்புக்கள் எவ்வளவோ இருக்க உமையம்பாளின் கால்கள் மட்டும் மெதுவாய் தான் உருள்கிறது மனதில் எண்ணங்கள் ஓடும்வேகத்தில் கூட அவளது கால்கள் இல்லை.
எங்கெங்கோ எண்ணம் பறக்க தன் ஒற்றைப்பட்டாம் பூச்சியாய் தன்னைச்சுற்றி பறந்த தன் மகனின் நினைவு மட்டும் சூழ்ந்து நினைவுகள் ஊர்வலம்போகும் எண்ணத்தில் ஊர்ந்தே செல்கிறாள் நெடுவீதியிலே.
மகனே...எங்கே போனாய்?
எங்கேயடா போனாய் .....? நீ இறுதியாய் சொன்னது நினைவிருக்கா உனக்கு



எனக்கு இன்னும் இரைந்துகொண்டே இருக்கிறது அது காதில் அழகான எம்மூரில் எத்தனை அழகிருந்தும் ஊரிலே நீ அழகனடா. விரும்பியோ விரும்பாமலோ நாட்டின் விடியலுக்காய் நீ நகர்ந்து சென்ற பாதத்தின் பார்வை இன்னும் என் கண்களில் இருக்குடா.. நீ இறுதியாய் சொன்னது இன்னும் நினைவிருக்கு நச்சுக்கள் நெஞ்சில் சுமந்தல்லவா நீ சொல்லிப்போனாய் அம்மா நான் எப்பிடியாச்சும் வந்திருவன்மா உங்கள மறுபடி பார்ப்பன் அம்மா நீங்க போங்க நான் வருவன் எத்தனை நாட்களடா உனக்காக காத்திருக்க எப்படா வருவாய் மகனே ....?
அரைதசாப்தமாய் நான் நடக்காத நலன்புரி முகாமில்லை நீ எங்கடா..என புலம்பியபடி வடியும் கண்ணீரை ஓட்டுப்போட்ட துணியினால் ஒருதரம் கண்களை ஒத்தடம் பிடித்தபடி நடக்கிறாள் வீதிவழியே உமையம்மா. வீதியில் ஏதோ சலசப்பு ஆம் ஏதோ நடக்கிறது. அங்கே ஒருபிள்ளையின் மணிப்பையை எடுப்பதற்காக இத்தனை அடிகள் அவனுக்கு. விறுவிறு வென அருகே சென்றாள் அவள். யாரும். இல்லை தொலைத்தவன் மட்டும் சுய நினைவின்றி சுருண்டு கிடக்கிறான வீதயிலே. "மகனே ஏய் பிள்ளை" எழும்பவே இல்லை அவன் என் மகனின் முகச்சாயல் அடிக்கிறது இவனில் இவன் என் மகனில்லை என்பது எனக்குத்தெரியும் எங்கேயோ இருப்பான் என்மகன். அவள் மனது வேகம்போல மருத்துவமனை செல்கிறது முச்சக்கரவண்டி டாக்டர் இவனைப்பாருங்க என சொல்லியபடியே மனதுக்குள் மண்டாடுகின்றாள் அவனுக்காய் சிகிச்சை எல்லாம் முடிச்சி சீக்கரம் முழிச்சிரணும் பிள்ளை என. ஒருநாள் இரண்டு நாட்களானது பின்பு கண்விழித்த அவனைப்பார்த்து "மகனே என்னடா பேர் உனக்கு? எங்க ஊர் உனக்கு......?"
இரண்டிற்கும் ஒரே பதில் அவன் விழிகளில் கைகளும் முகமும் மட்டும் சொல்கிறது "எனக்கு தெரியாது" என. சிலநாளில் உணவு நீர் மட்டும் அசைவுகளால் கேட்டுக்கொள்கிறான் அவன் என் மகன் எண்டா நான் செய்ய மாட்டனா என்னோட வீட்டுக்கு போவம் வாடா. சில வாரம் வீட்டில் நாட்கள் கடக்க இன்னும் இவன் பேசலயே. எல்லாம் நன்றாக செய்யிறான் பாவம் காது கேட்காத வாய் பேசாத என்மகன். இவன் ஒரு நாள் திடீரென்று சுயநினைவற்று கிடந்தான் மறுபடி மருத்துவமனை கொண்டு செல்லப்பட அவனது உயிர் உலகை விட்டு பிரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பிரியமாய் இருந்தேன் பெயர் கூட சொல்லாமல் போய்விட்டான்.. அம்மா சொல்லுங்க டாக்டர் ஐயா. அந்த மகன் இறந்தப்புறம் இத உங்ககிட்ட குடுக்க சொன்னவர் பதட்டத்துடன் கூடிய பதட்டம் அவளுக்கு. தாள்களை இறுகபிடித்தபடி திறக்கிறாள் மெதுவாக அவன் கைபட எழுதிய கடிதம் அது. எனக்கு ஒன்றும் புரியவில்லை டாக்டர் இதை ஒருக்கா படிச்சு சொல்லுங்களேன் ம்.. படிக்கின்றேன். அம்மா கேளுங்க අම්මා මම සන්කිත්
புரியல டாக்டர்.நான் சங்கீத்.அம்மா இத்தனை பெரிய வார்த்தை சொல்ல உலகில் யாருமில்லை என்றிருந்தேன். நன்றி அம்மா நீங்கள் எண்ணியது போல் காதும் வாயும் இயங்காதவன் அல்ல நான் நீங்கள் காட்டிய அன்பு என்னை பேசவிடல அம்மா எங்கே நான் உங்கள் மொழி இல்லையென்றால் என்னை உதாசீனம் செய்துவிடுவீரகளோ என்ற பயம் எனக்கு. இப்போது தோன்றுகிறது அம்மா அப்படி செய்திருக்க மாட்டீர்கள் நீங்கள். ஏன் எம் நாட்டில் இத்தனை பிரிவினையோ மொழிகளுக்கிடையில் எனக்கு தெரியவில்லை அம்மா நான் இறந்திருவன்னு முதலே எனக்குதெரியும் அம்மா. உங்கள் அன்பு இறுதிவரை கிடைத்தது எனக்கு போதும் அம்மா உங்கள் மகனைப்பற்றி நீங்கள் சொல்றது. கொஞ்சம் விளங்கிச்சு எனக்கு. உங்கள் மகன் நிச்சயம் இருப்பார் இடைவிடாது தேடுங்கள் அம்மா.
மொழிகளுக்குள் அடங்காதது தாய்மொழி என்று சொன்னது நீங்களம்மா நன்றிகள் என்றும் உங்கள் அன்பிற்கு.

"நன்றி" - நி.முகி

## தயிரின் பயன்கள்

தயிரில் முக்கியமான விற்றமீன் சத்துகளும் புரத சத்துகளும் அடங்கி உள்ளது. தயிரில் உள்ள புரதம், பாலில் உள்ள புரதத்தவிட சீக்கிரமாகவே ஜிரணமாகிவிடும்.
பாலை உட்கொண்ட ஒரு மணி நேரத்தில் **32** சதவீதபால் மட்டுமே ஜீரண பாதையில் செல்கிறது ஆனால் தயிரோ **91** சதவீதம் ஜிரணமாகிவிடும். தயிரில் இருக்கும் பக்டீரியா ஜீரண சக்தியை அதிகரிக்க செய்யும்.

## குறிப்புகள்



- இட்லி மா , தோசைமா பொங்காகமலிருக்க வாலை இலைபோட்டு மூடி வைக்கவும்
- கீரைகளைமூடி சமைக்க கூடாது
- வெண்டைக்காயை பச்சையாகவோ அல்லது அடிக்கடி உணவில் சேர்த்து கொண்டாலோ மூளை பலம் பெறும்.
- கரிசலாங்கண்ணி பொடி, திரிபலா பொடி, பிரம்மி பொடி, வல்லாரை, கீழாநெல்லி எடுத்து பொடியாக்கி, அதனுடன் தேன் கலந்து 41 நாட்கள் சாப்பிட்டு வந்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.
- இடுப்பில் இறுக்கமாக ஆடை அணிவதால் இடுப்பைச் சுற்றி கறுப்புத் தழும்பு ஏற்பட்டு விடும். இதைப்போக்க தழும்பு ஏற்பட்ட இடத்தில் தேங்காய் எண்ணையை தடவி லேசாக மசாஜ் செய்ய வேண்டும். இப்படி தொடர்ந்து செய்துவந்தால்தழும்பு மறந்து விடும்.
- பப்பாளி பழத்தை அரைத்து. முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.
- இரண்டு துண்டுகள் வாழைப் பழத்துடன் இரண்டு டீஸ்பூன் பால் சேர்த்து அரைக்கவும். இதை கண்களைச் சுற்றி அப்ளை செய்து 10 நிமிடங்களுக்கு மசாஜ் கொடுத்து, பின்னர் கழுவவும். இவ்வாறு தொடர்ந்து செய்துவர... நாளடைவில் கருவளையங்கள் நீங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 வயதுக்குள் நீங்கள் அனுபவித்துவிட வேண்டிய சில விடயங்கள்!

சொந்த காலில் நில்!
அப்பா, அம்மா, அண்ணன் என மற்றவர்களிடம் உதவி நாடி இருக்காமல், உங்கள் சொந்த காலில் நிற்கும் அளவிற்கு நீங்கள் நல்ல நிலையை அடைந்திருக்க வேண்டும். நாலவருக்கு உதவ வேண்டும் என்பதில்லை, யாருடைய உதவியும் இன்றி வாழ்வது என்பதே ஓர் பெரிய கௌரவம் தான்.

தோல்வி!
தோல்வியில் கற்காத பாடத்தை நீங்கள், வேறு எங்கும் கற்க முடியாது. தோல்வி உங்களை ஒழுங்குப்படுத்தும் ஆசான். ஓர் தோல்வியையாவது நீங்கள் சந்தித்துவிட வேண்டும். இல்லையேல், 30 வயதை கடந்த வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை கையாள முடியாமல் தவிக்கும் நிலை ஏற்படலாம்.

முதலீடு!
சம்பாதித்த பணத்தை, வருமானம் ஈட்டும் வகையில் எதிலாவது முதலீடு செய்து வைத்துவிட வேண்டும். அதை செலவு செய்யாமல், வருங்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தீய பழக்கம்!
ஏதேனும் ஒரு கெட்டப் பழக்கத்தையாவது 30 வயதுக்குள் நிப்பாட்டி விட வேண்டும். புகை, மது, கெட்ட வார்த்தை பேசுதல், பெண்மையை கொச்சையாக எண்ணுதல் என எதையாவது ஒன்றையாவது. எந்த கெட்டப் பழக்கமும் இல்லையா, நீங்களே உங்களுக்கு ஒரு சபாஷ் போட்டுக் கொள்ளுங்கள். ஏனெனில், தூய நல்லவர்களை இந்த உலகம் கேலி கிண்டல் தான் செய்யும்.

உண்மையான நட்பு!
எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும், எவ்வளவு பெரிய வெற்றி வந்தாலும், உங்கள் அருகில் நின்று தோள் கொடுக்க ஓர் தோழமை. எந்த எதிர்பார்ப்பும் இல்லாத உண்மையான தோழமை அமைத்துக் கொள்ள வேண்டும்.

சேமிப்பு!
பெரும்பாலும் 30 வயதை கடக்கும் போது, சிலர் திருமணம் ஆகியும், சிலர் குழந்தை குட்டி என இருப்பார்கள். எனவே, அடுத்த தலைமுறைக்கான சேமிப்பை அளவிற்கு குறையாமல் எடுத்து வைக்க வேண்டும். இது உங்களுடைய கடமை.

நேரம் பொன் போன்றது!
நேரத்தை அளந்து செலவு செய்ய வேண்டும். 30 வயதுக்கு மேல் நேரத்தை வீண் விரயம் செய்வது, உங்கள் வாழ்க்கையில் பெரும் இழப்பாக அமையும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வவுனியாவின் முன்னனி சாரதி பயிற்சி நிலையம்

# மஞ்சு லேணர்ஸ்

Manju Learners

**ML**
DS.843





- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சியும்
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விஷேட வீடியோ வகுப்பு நடைமுறை
- எழுத்து பரீட்சைக்கு தோற்றுவோருக்கு முன்னோடிப்பரீட்சை





#48, பஸ் நிலையம்,
வவுனியா.

077-7348989,024-2227467


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களும் அவர்தம் உரிமைகளும்




உலக சனத்தொகையில் கணிசமான தொகையினர் சிறுவராவர். இலங்கை சனத்தொகைப் புள்ளிவிபரங்களின்படி 1995இல் 27.7 சதவீதம் சிறுவராவர். சிறுவர் என்பது இலங்கை சிறுவர் சாசனப்படி 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவராவர். 1939இன் சிறுவர் இளைஞர் கட்டளைச்சட்டம் சிறுவர் 14 வயதுக்குக் கீழ்ப்பட்டவர் என்றும் இளைஞர் 14—16 வயதுகுட்பட்டவர் என்றும் வரையறுத்துள்ளது.1989இன் வயது வந்தவர் திருத்த சட்டத்தின் படி சிறுவர் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவராவர். பொதுவாக 14 வயது வரை சிறுவரென ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இன்று உலகின் பல பாகங்களிலும் சிறுவர் எத்தகைய பாதிப்புக்கு உட்படுகின்றனர் என்பதை வெகுசன ஊடகங்கள் மூலம் அறியமுடிகிறது.அவர்கள் குறைந்த சம்பளத்தில் கடின வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். வீட்டு எஜமானிகளின் தண்டனைகள், நெருப்பினால் சூடு,உணவின்றிப் பட்டினி போடல்,வீட்டை விட்டுத்துரத்தல் போன்ற கொடூர செயல்களால் சிறுவர்கள் தெருவில் அலைகிறார்கள். பிச்சை எடுக்கிறார்கள். யுனிசெஃப் அறிக்கையொன்றின்படி (1996) உலகில் 14 வயதுக்குக் கீழ் 250 மில்லியன் சிறுவர்' கடின உழைப்பில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் மட்டும் 60—115 இலட்சம் சிறுவர் வேலை செய்கின்றனர்.

14 வயதுக்குக் கீழ் சிறுவரை வேலைக்கமர்த்தலுக்கு எதிராக இலங்கையில் பல சட்டங்கள் இருந்த போதிலும் 10 இலட்சம் சிறுவர் உழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர். 1 இலட்சம் சிறுவர் தெருவில் நிர்க்கதிக்கு உள்ளாகின்றனர். ஒடுக்கப்படுவதன் காரணமாக இளங் குற்றவாளிகளாகவும் மாறுகிறார்கள். சுமார் 5 இலட்சம் சிறுவர்கள் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறுவர்களை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதும் உலகளாவிய ரீதியில் காணப்படும் அம்சமாகும். சிறுவரை ஆயுதப் போரில் ஈடுபடுத்துவது தொடர்பான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி அலுவலகம் விடுத்துள்ள தகவலின்படி ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான சிறுவர்கள் போர் நடவடிக்கைகளால் கொல்லப்பட்டுள்ளனர். 250000 சிறுவர் உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் யுத்தங்களில் இளம் போர் வீரர்களாக ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். மேலும் 12 மில்லியன் சிறுவர்கள் வீடிழந்து நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

யுனிசெஃப் இன் கணிப்பீட்டின்படி 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட சுமார் 30000 சிறுவர் கடற்கரைப் பிரதேசங்களில் தன்னினச் சேர்க்கைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1970களின் பின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியுடன் இந்நடவடிக்கைகள் பெருகிவருகின்றன. தாய்லாந்தில் 2 இலட்சம் சிறுவர்களும்இ பிலிப்பைன்சில் 20000 சிறுவர்களும் பாலியல் துஸ்பிரயோகத்துக்குப் பயன்படுகின்றனர். சிறுவர் பாலியல் நடத்தைகள் Aids எனும் கொடிய நோய்ப் பரம்பலுக்கும் காரணமாக அமைகின்றது. விரிவான குடும்ப அமைப்புகள் ஆசிய நாடுகளில் கூட அதாவது பெற்றாரின் கண்காணிப்பில் பிள்ளைகள் வாழுகின்ற போதிலும்கூட சிறுவர் துஸ்பிரயோகம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

"குழந்தைகள் நட்சத்திரத்தை ஆகாயத்தில் காண்பதில்லை. ஓடும் நதி நீரிலே கண்டு விடுகிறார்கள்" என்றார். பிரபல ருஷ்யத் திரைப்பட இயக்குநர் உவ்சென்கோ. இவ்விடத்தில் மேற்படி கருத்தினை ஆழமாக சிந்தித்தல் வேண்டும். 1924 ஆம் ஆண்டிலேயே முதன் முதலில் சிறுவர் உரிமை தொடர்பான கொள்கை வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 1959 ஆம் ஆண்டு பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக ஐக்கிய நாடுகள் சபையால் விரிவாகவும் தெளிவாகவும் சிறுவர்களுக்குரிய உரிமைகள் தொடர்பான கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது. 1959 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனம் 1924 ஆம் ஆண்டின் பிரகடனத்தை விட பல அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை பின்வருமாறு அமைகின்றது.

☑ வாழ்வதற்கும் முன்னேற்றுவதற்குமான உரிமை.
☑ பிறப்பின் போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
☑ பெற்றோரைத் தெரிந்து கொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை.
☑ பெற்றோரிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை.
☑ கருத்தை வெளிப்படுத்தும் உரிமை.
☑ சிந்திப்பதற்கும் மனச் சாட்சிப்படி நடப்பதற்கும் சமயமொன்றைப் பின்பற்றுவதற்குமான உரிமை.
☑ சமூக உரிமை தனியுரிமை சுகாதார வசதிகள் பெறும் உரிமை.
☑ போதிய கல்வியைப் பெறும் உரிமை.
☑ பொருளாதார சுரண்டல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.
☑ பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.
☑ சித்திரவதை குரூரமாக நடத்துதல் போன்ற தண்டனைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் உரிமை.
☑ சாதாரண வழக்கு விசாரணைக்குள்ள உரிமை.
☑ சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை.

இவ்வாறு பல்வேறு உரிமைகள் சிறுவர் உரிமை தொடர்பில் பட்டியலிடப்பட்டுள்ளன. நடைமுறையில் உலக நாடுகளிலாகட்டும் அல்லது நமது நாட்டிலாகட்டும் இவற்றில் எத்தனை நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

யுத்தம் மற்றும் அவ்வப்போது ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் யுத்தம் நிறைவுற்ற சூழ் நிலையில் கூட உடல் உள சமூக ரீதியாக பல சவால்களையும் எதிர்ப்புகளையும் சந்தித்து வருகின்றமை அவர்களின் பாதுகாப்பு குறித்த அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளமை நோக்கதக்கதோர் விடயமாகும்.




## தமிழ்ச் சொற்கள் சில...

ஐஸ்கிறீம் - குளிர்களி
கார் - மகிழுந்து
ஸ்பெனர் - சுரைமுடிக்கி
அன்னாசி - செந்தாழை
ஆரஞ்சு - கிச்சிலி
கேக் - கட்டிகை
பாண் - வெதுப்பி
கடிதம் - மடல்
அப்பிள் - குமளி, அரத்தி
கிவிப்பழம் - பசலிப்பழம்
கரட் - மஞ்சள்கிழங்கு, குருக்கிழங்கு
சப்போட்டா பழம் - சீமையிலுப்பைபழம்
சப்பாத்து - அடிபுதைஅரணி
பீற்றூட் - செங்கிழங்கு, அக்காரக்கிழங்கு
மங்குஸ்தான்பழம் - கடார முருகல் பழம்
வாட்டர்மெலோன் - குமட்டிப்பழம்




Ravi Learners
RL 626
இக் கூப்பனை பூர்த்தி செய்து விஷேட விலைக்கழிவினை பெற்றுக் கொள்ளுங்கள்

Name : ..........
Contact Number : ..........
N.I.C : ..........

The Offer is Valid till Sep 30




Government Approved "B" Grade
Driving Training School
Call: 077 631 3670




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


எமது வெளி சஞ்சிகை
தொடர்பான விளம்பர
தொடர்புகளுக்கு



"வெளி" சஞ்சிகை
#187/10, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா.
077 283 1809
024 205 0492

## வெளி சஞ்சிகையின் பரிசுக் குவியல்

கூப்பன்



பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

அடையாள அட்டை இல. : ..................................

தொலைபேசி - இல. : ..........................................

மேலுள்ள கூப்பனை வெட்டி அனுப்பி பரிசுகளை வெல்லுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி
"வெளி" சஞ்சிகை
#187/10, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா.

10 வாசகர்களுக்கு மட்டுமே..




# Ravi Learners

RL 626

"விதிகளை மதிப்போம்
விபத்துக்களை தவிர்ப்போம்"




36A, UC Quaters,
Mannar, Road, Vavuniya

Government Approved "B" Grade
Driving Training School




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாமன்றம் நடாத்திய தமிழ் மாருதம் 2016











## நிகழ்வுகளின் நிழல்கள் சில.....











ஆவணி 28ம் திகதி வவுனியாவில் சிறீஞானேஸ்வரன் (மாயன்) அவர்களுடைய "சிறையில் இருந்து மடல்கள்" என்ற கவிப்பொத்தக அறிமுகவிழா அரங்காலயாவின் ஏற்பாட்டில் அதன் இயக்குனர்களான சத்தியானந்தன் மற்றும் பிரதீப் ஆகியோரின் அயராத முயற்சியால் இப்பொத்தக அறிமுக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















# “வெளி”யின் தடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















ளில் சில......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

மண் வாசம் நிறைந்த வன்னி மண்ணிலே வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பிரதான நகரமான வவுனியாவின் கல்வி வளர்ச்சியிலே கண்டி வீதியிலே தனது கம்பீரத்தை தலை நிமிர்ந்து வெளிப்படுத்துகின்றது.

1931 இல் இருமொழிப் பாடசாலையாக மன்னார் வீதியில் (தற்பொழுது காமினி மகா வித்தியாலயம் அமைந்துள்ள இடத்தில்) ஆரம்பிக்கப்பட்டு 25 மாணவர்களை மாத்திரம் தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. 1952 இல் அதிபராக பணிபுரிந்த திரு.சின்னத்தம்பி அவர்களின் அயராத முயற்சியால் சிரேஷ்ட பாடசாலையாக மாத்திரம் காணப்பட்டது. அதைத் தொடர்ந்து 1958இல் திரு.சாமுவேல்.அதிபராக பதவி வகித்த காலத்தில் தற்போது கம்பீரமாய் காணப்படும் கண்டி வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. தொடந்து 1993 இல் ஆரம்பபிரிவு ஆரம்பிக்கப்பட்டது. பின் 1971 இல க.பொ.த.(உயர்தர) விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1972 இல் மத்திய மகா வித்தியாலயமாக மாற்றமடைந்த பாடசாலையானது 1995 ஆம் ஆண்டு திரு.S.சிவகுமாரன் அதிபராக கடமையாற்றிய காலத்தில் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இக் காலத்தில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை போதனையாகக் கொண்ட பாடசாலையாக திகழ்ந்தது. தொடர்ந்து 1997 இல ஆலய வளவினுள் வித்யா விநாயகர் ஆலயம் நிர்மானிக்கப்பட்டது. மேலும் பாடசாலை வரலாற்றைப் பேணும் முகமாக "கதிராளி சஞ்சிகை" வெளியீடு செய்யப்பட்டது.



தொடர்ந்து 2004 இல் திரு.சி.உலகநாதன் அதிபராக பணி புரிந்த காலப் பகுதியில் பல அபிவிருத்திகளை பாடசாலை அடைந்தது. 1978 இல் அமைக்கப்பட்ட மாணவர் விடுதி சீரமைக்கப்பட்டு அதற்கு "சுந்தரலிங்கம் விடுதி" என பெயர் சூட்டப்பட்டது.

## தூர நோக்கு

சவால்களுக்கு முகம் கொடுக்கும் சாதனைமிகு மாணவர்களை உருவாக்கும் பணியின் பங்காளியாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை வளாகத்தை பாதுகாக்கும் முகமாக சுற்று மதில் அமைக்கப்பட்டது. மேலும் வித்யா விநாயகர் ஆலயம் புனர்ஸ்தாபனம் செய்யப்பட்டு சரஸ்வதி, இலக்குமி கோவில்கள் அமைக்கப்பட்டு எழுந்தருளி விநாயகரும் வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டு 2008 ஆவணியில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

மேலும் பல இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் முன்னிலை வகித்தது குறிப்பிடத்தக்கது. கற்றல் கற்பித்தல் துறையில் வகுப்பறை முகாமைத்துவ மேற்பார்வைக்காக பாட இணைப்பாளர், தர இணைப்பாளர், பகுதிதலைவர்க்கு மேலாக கல்வி அபிவிருத்திக்கென பிரதி அதிபர் நியமிக்கப்பட்டு பாடசாலை மேற்பார்வை வினைத்திறனாக்கப்பட்டது. தொடர்ந்து 03.03.2011 இல் பாடசாலை அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு.ம.ச.பத்மநாதன் பல சிக்கல்கள் சவால்களிற்கு மத்தியிலும் தனது அயராத முயற்சியிலும் பெற்றோர், பழைய மாணவர்கள் பங்களிப்புடனும் பாடசாலை பல அபிவிருத்தியடைந்தது.


வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தில் இவரது பதவிக்காலம் குறுகியதாக இருந்தாலும் அக் காலத்திலும் அவர் நிகழ்த்திய சாதனைகள் அளப்பெரியது. அதாவது தமிழ் மொழித்தினம், விளையாட்டுபோட்டி, இணைப் பாட விதானச் செயற்பாடுகள் போன்றவற்றில் வலயம், மாவட்டம் மாகணம் தாண்டி தேசியரீதியிலும் சாதனை படைத்தது. மேலும் இப் பாடசாலையில் 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்திற்கான மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை அமைக்க அனுமதி மறுக்கப்பட்ட போதும் அதிபர் அவர்களின் அயராத முயற்சியியாலும் கௌரவ பாராள மன்ற உறுப்பினர் திரு.S.சந்திரகுமார் அவர்களது ஒத்துழைப்பாலும் இப் பாடசாலையில் தொழில்நுட்பபிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

அவரைத் தொடர்ந்து அதிபராக கடமையாற்றிய திரு.மரியநாயகம் அவர்களது காலத்தில் மிக முக்கிய திருப்பு முனையாக பழைய மாணவர்களது அயராத முயற்சியால் பாடசாலை வாயில் மிக அழகுடனும் மிடுக்குடனும் தோற்றமளிக்கிறது.

அதைத் தொடர்ந்து 21.07.2016 அன்று புதிய அதிபராக ஓமந்தை கோட்ட கல்வி அதிகாரியும் புதுக்குளம் மகா வித்தியாலய முன்னைநாள் அதிபருமாகிய திரு.தா.அமிர்தலிங்கம் அவர் தமது பதவியை ஏற்றுக்கொண்டார் இவரது பதவிக்காலமும் பாடசாலை வளர்ச்சிக்கு மேலும் துணைநிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## நன்றி

தொகுப்பு
ஜெகநாதன் சுலக்ஷன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமம் அறிமுகம்

கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் பிரதான வீதியான A9வீதியில் 188 மைல் கல் தொலைவில் காணப்படும் நாம்பன்குளம் வீதியூடாக சுமார் 6.6km தூரத்தில் ஓமந்தை பிரதேசத்தில் அமைந்துள்ள 215/c கிராம சேவகர் பிரிவினைக் கொண்ட 175 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த ஓர் அழகிய இயற்கை எழில் கொஞ்சும் ஓர் பசுங் கிராமமே கள்ளிகுளம் ஆகும். 2ம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட வீரர்கள் திருகோணமலைக்கு இக் கிராமத்தின் ஊடாக சென்றதாக கூறப்படுகின்றது. இதன் மூலம் இக் கிராமத்தின் தொன்மைத் தன்மை புலப்பட்டு நிற்கின்றது. இக் கிராமம் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்த கிராமமாக காணப்பட்ட போதிலும் 1977,1982,1984ம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அசாதாரண நிலமைகள் காரணமாக இக் கிராமமக்கள் தமது உடமைகளையும், தமது பூர்வீக இடங்களையும் விட்டு விட்டு இடம்பெயர்ந்து சென்றனர்.அது மட்டுமன்றி தமது உயிரினைக் காப்பாற்றும் பொருட்டு சகல உடைமைகளும் இழந்து பல்வேறு கிராமங்களிலும், அகதி முகாம்களிலும் குடியேறி இருந்தமை இப்போதும் அவர்களின் பேச்சுக்களின் மூலம் வேதனைகளாக வெளிப்படுத்தப்படுகின்றது.

## கள்ளிக்குளம்

பின்னர் குடியேறிய மக்கள் மீண்டும் ஒரு யுத்த அசாதாரண நிலைமைகள் காரணமாக 1990ம் ஆண்டு தமது சொத்துக்களையும்,வீடுகளையும் இழந்த நிலையில் இடம்பெயர்ந்து சென்றனர். அதன் பிறகு 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் காரணமாக தமது பூர்வீக கிராமமான கள்ளிக்குளம் கிராமத்திற்கு 2010ம் ஆண்டு மீண்டும் வந்து குடியேறினர்.அங்கு குடியேறிய மக்கள் தமது வீடுகளையும் உடைமைகளையும் இழந்து நிரந்தர வீடுகள் அற்ற நிலையில் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகி காணப்பட்டனர். விவசாயத்தினை பிரதான சீவனோபாயமாகக் கொண்ட இம்மக்கள் தமது விவசாயத்தினை மேற்கொள்வதற்கான நிலங்கள் சூறையாடப்பட்ட நிலையில் அதற்கான எந்தவித முயற்சிகளும் உரிய அதிகாரிகளினால் எடுக்கப்படாத நிலையில் பெரும் இன்னல்களை இக் கிராமத்து மக்கள் அனுபவித்து வருகின்றனர். மிகவும் பின்தங்கிய கிராமமான இக் கிராமமக்கள் பொருளாதாரத்திலும், சமூகநீதியிலும் பெரிதும் இன்னல்களுக்கு மத்தியில் தமது சீவனோபாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். இக் கிராமத்து மக்களின் தேவைகள் மிகவும் அதிகளவில் காணப்படுகின்ற போதிலும் அதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

Kallikulam.

இதற்கு உரிய அரச அதிகாரிகளின் அசமந்த போக்கும், கிராம மக்களின் ஒற்றுமை இன்மையுமே காரணம் எனலாம். கிராம மக்களின் மூலம் கிடைக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பொருளாதார வாழ்வியல் நடவடிக்கைளானது சிறு சிறு தொழில்களினை மையமாகக் கொண்டே அவர்களினுடைய வருமானத்தினை ஈட்டிக் கொள்கின்றனர். அன்று தொட்டு இன்று வரை விவசாயமே சீவனோபாயமாகக் காணப்பட்டு வருகின்றது. ஆனால் தற்போது அவர்களுக்கு இருக்கக்கூடிய விவசாய நடவடிக்கை சம்பந்தமான அறிவு இருந்தபோதிலும் விவசாயத்தினை பாரியளவில் செய்வதற்கானபோதிய வசதிகளும் விவசாய நிலங்களும் இல்லாத நிலமைகளைக் காணக்கூடியதாக உள்ளது.விவசாயத்தினை மேற்கொள்வதற்கான மிக முக்கியமான விடயமாக குளங்கள் புனரமைக்கப்படாத அவல நிலை காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் குளங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதால் போதியளவிலான நீர் மற்றும் வடிகாலமைப்பு வசதிகள் இல்லாமை காரணமாக அம் மக்களால் பெரும்போக செய்கைகளும் சிறு போக செய்கைகளும் செய்வதற்கு முடியாமல், மரக்கறிகள் மற்றும் சிறு சிறு தானியங்கள் என்பவற்றைக் கொண்டு குறுகியளவிலான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.இக் கிராமங்களுக்கு அருகாமையில் மாமடு மற்றும் மகா கச்சகொடி போன்ற பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் அயல் கிராமங்கள் காணப்படுகின்றது. அவர்களுடன் இக்கிராம மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றமையானது பாராட்டத்தக்க விடயமாக காணப்பட்ட போதிலும், அவர்களின் பொருளாதாரம் முடங்கக்கூடிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அக்கிராம மக்கள் கூறிய தகவலின் அடிப்படையில் தங்களுக்கு தொழில்பயிற்சியும், சிறந்த விழிப்புணர்வும், சந்தை வாய்ப்புக்களும், சுயதொழில் செய்யக்கூடிய வகையில் வசதிகளும் சீரான போக்குவரத்து வசதிகளும் இருக்குமேயானால் அவர்களின் வருமானம் சிக்கல் நிலையில் இல்லாமல் போய்விடும் என அவர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளிக்குள கிராமத்தின் தனது வாழ்வியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அக்கிராம மக்களின் வருமானச் சக்கரத்தை எடுத்து நோகும் போது வருமானத்தில் மிகவும் மந்தமான நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அவர்களின் வருமானத்தை ஈட்டித்தரும் தொழில்களாக கூலித் தொழில், வீடுத்தொட்டம், விவசாயம், சிறுகடை வியாபரம், மீன் பிடி, கால்நடை வளர்ப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தனியார் துறை வேலைவாய்ப்பு என்பனவே காணப்படுகின்றன. இவ்வாறான தொழில்களின் மூலம் அக்கிராம மக்கள் கிடைக்கப் பெறுகின்ற சிறு வருமானத்தைக் கொண்டு தங்களது வாழ்கையை நடத்திவருகின்றனர்.

இவ்வாறான தொழில்கள் இருந்த போதிலும் சிறு தொழில்களான விவசாயம், வீட்டுத்தோட்டம், சிறுகடை வியாபரம், கால்நடை வளர்ப்பு, போன்றவற்றிற்கு போதியளவான பயிற்சியின்மை காரணமாக அத்தொழில்களை மேலும் விருத்தியடையச் செய்வதற்கான திறன் அவர்களிடம் காணப்படாமல் அத்தொழில்கள் மேலும் வளர்ச்சி அடையாமல் குறுகிய ஒரு வட்டத்திற்குள்ளே காணப்படுகின்றன. கூலித்தொழிலினையே தங்களது நிரந்தர தொழிலாகக் கொண்டு அதிகமான மக்கள் அத்தொழிலை நாடி தங்களது குடும்பத்தை பல சவால்களுக்கு மத்தியில் நடாத்தி வருவது தெட்டத் தெளிவாக விலங்குகின்றது. இதற்கு காரணமாக கூறப்போனால் இங்குள்ள கூடுதலான மக்களுக்கு எவ்வித தொழில்பயிற்சிகளும் வழங்கப்படாமையே காரணமாகும்.

## கிராமத்தின் முழு விபரங்கள் ஒரே பார்வையில்...

கிராமத்தின் பெயர் கள்ளிக்குளம்

கிராமத்தின் பரப்பளவு 34.12 சதுர கிலோமீற்றர்

கிராம சேவையாளர் பிரிவு 215/C கள்ளிக்குளம்

பிரதேச செயலாளர் பிரிவு வவுனியா

மாவட்டம் வவுனியா

மாகாணம் வடக்கு

பிரதான வீதிக்கான தூரம் 6.6Km

பிரதான வைத்தியசாலையின் தூரம் 6.6km

பொலீஸ் நிலையம்/தபால் நிலையம் மாமடு

பிரதான நகருக்கான தூரம் 16.6Km

மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 186 குடும்பங்கள்

மொத்த சனத்தொகை எண்ணிக்கை 796 பேர்

கிராமத்தின் பிரதான வருமானம் விவசாயம்

ஏனைய வருமானங்கள் - கூலித் தொழில் ,வீட்டுத்தோட்டம், கால்நடை, மீன்பிடி, மேசன் ,தச்சு ,சிறு கடை, வீட்டுத்தோட்டம் , தனியார் நிறுவனங்கள் , வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய கைதொழில்கள்.

முன் பள்ளிகள் 1

முன் பள்ளி சிறார்கள் 39 பேர்

முன் பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை 03 பேர்

ஆசிரியர்கள் விபரம் - ரவிக்குமார் பிரியதர்சினி Diploma

தெய்வேந்திரம் உதயதேவி O/L , Training

மேசி கனிஷ்டா சத்தியசீலன் 07 Years , Training

பாடசாலையின் பெயர் கருங்காலிக்குளம் அ.த.க.பாடசாலை

பாடசாலை விபரம் (தரம்) 1-10 வரை

எந்த வகைப் பாடசாலை வகை - II

பாடசாலை செல்லும் மாணவர்களின் மொ.எண்ணிக்கை 126 பேர்

வீதியின் வகை கிரவல்

கிராமத்திற்குள் உள்ள வீதியின் தூரம் 12Km

வீதிப்பராமரிப்பின் முக்கியஸ்தர்கள் RDD, பிரதேச சபை

வீதியின் தற்போதைய நிலை மிகவும் மோசமான நிலை

பொதுக் கட்டிடங்கள் - முன் பள்ளி, கிராமசேவகர் காரியாலயம், பொதுநோக்கு மண்டபம்

விளையாட்டு மைதானம்

மயானம்

சிறுவர் பூங்கா


முதியோர் ஓய்வகம்

குடிநீர் பெறும் முறைமை பொதுக் கிணறுகள் 03, குழாய் கிணறுகள் 06, தனிக்கிணறுகள் 92

சமய வழிப்பாட்டுத் தலங்கள்

கோவில்கள் 03

தேவ ஆலயங்கள் 02



இவ்வாறு பல வசதிகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும் கூட மக்களின் தேவைகள் சீராக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதே மெய்மையாக காணப்படுகின்றது எனவே "வெளி" யின் தேடலாய் அமைந்த கள்ளிகுளத்தின் வளர்ச்சியினை சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களே உங்கள் கவனத்திற்கு முன்வைக்கின்றோம்.

தொகுப்பு
தர்மலிங்கம் பமீகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடாபியின் மறுபக்கம்......

1. லிபியாவில் மின்சார கட்டணம் கிடையாது, மின்சாரம் இலவசம்.

2. வங்கிகளில் வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி கிடையாது.

3. வீடு மனை என்பது லிபியாவில் மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

4.அந்த நாட்டில் மணம்முடிக்கும் ஒவ்வொரு புதுமணத்தம்பதியினர்களுக்கும் அந்நாட்டின் அரசு 60,000 தினார், அதாவது அமெரிக்க பணம் 50,000 டாலர் அதாவது இந்திய பணம் சுமார் 28,00,000 ரூபாய் பணத்தை இலவசமாக வழங்கியது.

5.லிபியாவில் கல்வி மற்றும் மருத்துவம் முற்றிலும் இலவசம், கடாபி அதிகாரத்தை கைப்பற்றும் பொழுது லிப்ய மக்களில் எழுத படிக்கத் தெரிந்தோர் வெறும் 25% மட்டுமே , ஆனால் அவர் ஆட்சிக்கு வந்ததன் பின் அது 83% உயர்ந்தது.

6.எந்த ஒரு லிப்யனும் விவசாயம் செய்ய விரும்பினால் அவன் விவசாயம் செய்யும் இடத்தில் வாழ்வதற்கு அவசியமான ஒரு வீடும், விவசாயம் செய்வதற்கு தேவையான அனைத்தும் முற்றிலும் இலவசம்.

7. லிப்யர்களுக்கு லிபியாவில் மருத்துவ வசதி பெறுவதற்கோ அல்லது வெளிநாட்டில் மேற்படிப்பு தொடர்வதற்கோ வசதி இல்லை எனில் அந்த நாட்டு அரசு இலவசமாக அவர்களுக்கு உதவிகள் வழங்கும்.

8. எந்த ஒரு லிபியனும் ஒரு வாகனம் வாங்கும் போதும் அதன் மதிப்பில் அரைவாசித் தொகையை அந்நாட்டின் அரசு இலவசமாக வழங்கும்.

9. அந்த நாட்டில் ஒரு லிட்டர் பெற்றோலின் விலை வெறும் $0.13 மட்டுமே.

10. லிப்யா உலக வங்கிகளிடம் இருந்து இதுவரை கடன் வாங்கியது கிடையாது.

11. உயர் கல்வி கற்று பட்டதாரி ஆகும் மாணவர்கள் தமக்குரிய வேலை வாய்ப்பு கிடைக்காது போகும் பட்சத்தில், அவர்களுக்குரிய தகுந்த தொழில் கிடைக்கும் வரை அந்தத் தொழிலுக்குரிய சம்பளத்தை அந்த அரசு மாத மாதம் வழங்கி வந்தது.

12. அந்த நாட்டிற்கு கிடைக்கும் எண்ணெய் வருமானத்தில் ஒரு தொகையை அந்த நாட்டு மக்களின் வங்கிக் கணக்கில் சேமிப்பில் இடும் அந்த அரசு.

13. ஒவ்வொரு குழந்தை பிரசவத்தின் போதும் அந்தத் தாயிற்கு அந்த நாட்டு அரசு 5500 அமெரிக்க டாலர் நாணயத்துக்கு பெறுமதியான லிபிய தினாரை வழங்கும் அதாவது இந்திய பணம் மூன்று லட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய்.

14. 40 ரொட்டிகள் வெறும் $0.15 தினார் மட்டுமே.

15. 25% லிப்யர்கள் பல்கலைக்கழக பட்டதாரிகளாவர்.

16. உலகிலேயே மிகப்பெரிய செயற்கை ஆறை உருவாக்கி லிபியாவின் பாலை நிலத்தை பசுமையாக்கியவர் என்ற பெருமை கடாபிக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPOKEN ENGLISH CLASSES

FULL TIME
&
PART TIME

உங்கள் முயற்சிக்கு
எங்கள் வழிகாட்டல்



## 2 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடிய வகையில் இலகு வழிகாட்டல்

ஆங்கிலத்தை முழுமையாக முழுநேரம் கற்று சிறந்த ஆங்கில மொழித்திறனுடையோராக ஒரு வாய்ப்பு

## WHY STUDY AT NSOFT ACADEMY?

- ☑ பிரிட்டிஷ் மொழி நடையில் ஆங்கில பயிற்சிகள்
- ☑ A1, B1, B2 டிப்ளோமா கற்கை நெறிகளுடன்
- ☑ இணை பாடத்திட்டம்
- ☑ விஷேட உச்சரிப்பு பேச்சுப்பயிற்சி கருத்தரங்குகள்
- ☑ கிழமை நாட்களில் முழுநேர வகுப்புகள்
- ☑ இலவச வழிகாட்டல் ஆங்கில புத்தகங்கள் மற்றும் கையேடுகள்
- ☑ வெளிமாவட்ட மாணவர்களுக்கு விசேட தங்குமிட வசதிகள்

NSA

**Please Contact us to Get More Information**

**077 646 8746**

www.nsoftedu.com
info@nsoftedu.com
facebook.com/nsoftacademy

NSoft Academy, Vairavarkovil Road, Vairavapuliyankulam, Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BHAKIRATHAN
## Computer Centre





Photocopy, Printing, Scanning, Color Printing, Laminating,
Computer & Printer Repairing,
Photocopy & Printer Comfortable & Refill Toner.

077 959 9251
024 222 1491
bhaki1986@gmail.com
26A, Katkuly, Vavuniya

A4 PHOTOCOPY - RS.3/-
(UP TO 10 COPIES.)
A4 PRINTOUT - RS.3/-
(UP TO 100 COPIES.)
A4 COLOUR PRINT - RS.10/-
(UP TO 10 COPIES.)

# UNIVERSAL TEX




Dealer in Textiles & Readymade Garment Skirt,
Bike Cover, Blouse, Shirt, Tours & Poplin etc

#143, Bazaar Street,
Vavuniya
024 2222 545







# Van for Hire

## Van Service
A/c, Non-A/c



V.Jeevan
0777 299 261




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் மறந்த உலகு.

பந்தி பந்தியாய் குறுஞ்செய்திகளும் பகட்டுக்காய் ஒன்றிரன்று தொலைபேசி அழைப்புக்களும் என்று இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டிலேயே ஈடிணையற்ற வசதிகளுடன் வாழும் எம் சொந்தங்கள் பெற்றது என்னவோ அதிகம்தான். ஆயினும் பலவற்றை இழந்ததும் மறந்தும் போனோம். ஆம் பாசம் நேசம் அன்பு நட்பு ஜீவகாருண்யம் என்ற தமிழர் தம் அடையாளங்களையும் மறந்து விட்டோம்.

மதங்களால் பிரிக்கப்பட்டாலும் மொழிகளால் பிரிக்கப்பட்டாலும் இனங்களாக பிரிக்கப்பட்டாலும் மனிதர்கள் யாவருமே மனிதம் எனும் பண்பினிலே ஒன்றினைகின்றோம். மாற்றம் ஒன்றே மாறாதது

அந்தவகையில் பிள்ளை பள்ளி சென்று பசித்து வரும் வேளையிலே அள்ளி அணைக்க யாருமில்லை. கணவன் வேலை விட்டு வீடு வந்தால் வேளைக்கொரு உணவில்லை. என்று நவீன மயப்பட்ட இவ்வுலகிலே மக்கள் மாக்களாகியதும் ஏனோ வியப்பிற்குரியதாய் தோன்றவில்லை. சக மனிதர்களிடம் அன்பு காட்டுதல். பிறருக்கு துன்பம் அளிக்காமல் இருத்தல். இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குதல். இளகிய இதயமும். இரக்க சுபாவமும், உறுதியான செயல்பாடுகளும் கொண்டிருத்தல் என்பவற்றினை மனித நேயம் எனக் கூறலாம். மனங்களை ஒன்றிணைத்த மனிதநேயம் இன்று மரணங்களில் கூட மரணித்து விடுகின்றது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சங்க புலவன் கணியன் பூங்குன்றனது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற இவ்வடிகள் ஒன்றிணைந்த மனித நேயத்தினை எடுத்துரைக்கிறது. என்றால் மிகையாகாது. 1893-ல் அமெரிக்காவின் சிக்காகோ மாநகரில் நடைபெற்ற உலக மதங்களின் ஒன்றுகூடலில் கலந்தது கொண்ட அனைவரையும், "சகோதர... சகோதரிகளே..." என்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் விளித்து உரையாற்றி உலக மக்களிடையே மனித நேயத்தை எடுத்துரைத்தார் தமிழர் தம் வாழ்வியல் இதிகாச நூலான இராமாயணத்தில் கூட நிராயுதபாணியாக போர்க்களத்தில் நின்ற தனது எதிரியான இராவணனை இராமன் "இன்று போய் நாளை வா" என்று கூறி மனித நேயத்தை பண்பினை வலியுறுத்தியிருக்கிறார்கள்.இவ்வாறெல்லாம் பேணப்பட்ட மனிதநேயம் இன்று **MONEY**த நேயம் ஆகி விட்டது இக்காலச் சூழலில் மனிதன் மற்ற உயிர்களை நேசிக்கும் பண்பு தேய்மானத்தை நோக்கியும், தனது வளர்நிலையில் சிக்கலையும் எதிர்நோக்கி உள்ளது., என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அறிவியலின் அசுர வளர்ச்சியும், அதன் வழியாக நிகழ்ந்து வரும் பண்பாட்டின் வீழ்ச்சியும். நாகரீகம் என்ற பெயரில் மனிதனைப் பழிவாங்கும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனநிலையும் மனிதநேயத்தினை மனித மனங்களில் ம(ர)றக்க செய்து விட்டது என்பதே நிதர்சனமாகும்.

செல்வி-நகுலேஸ்வரன் சஃபினி
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலம் மற்றும் தொழில்சார் கல்விப்பாதையில் வீறு நடைபோடும்.

# International Academy of Professional Studies










போட்டி உலகை வென்றிட இளைஞர் சமுதாயத்தை சிறப்பான எதிர்காலத்திற்குஇட்டு செல்ல எமது IAPS நிறுவனம் கடந்த 1 வருட காலமாக வவுனியாவில் சிறப்பான சேவைகளை செய்து 300ற்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்டு தன்னுடைய இருப்பை தக்கவைத்துள்ளது.

அதி திறமை வாய்ந்த முகாமைத்துவ கட்டமைப்பும், தகமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர் குழாத்தையும் உள்ளடக்கிய நிறுவனம், Diploma in English, Spoken English,Swiss & German - Deutsch, Netherland - Dutch,France - French ,Sinhala மொழிகளில் தடம் பதித்து இருக்கும் அதே வேளை பெண்களுக்கான பிரத்தியோகமான மற்றும் ஆண்களுக்கான தொழிற்கல்வி, கணினி கற்கைநெறி, கலைசார் கற்கைகள் போன்றவற்றில் முன்னணியில் திகழ்கிறது. கடந்த மாதம் இங்கு கல்வி பயின்ற மாணவர்களை கௌரவிக்கும் முகமாக வடமாகாண சுகாதார அமைச்சர் திரு.பத்மநாதன் சத்தியலிங்கம் மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயளாளர் திருமதி.சுகந்தி கிஷோர் மற்றும் IAPS நிறுவன முகாமையாளர் **SNS.Naazim** இவர்களின் தலைமையின் கீழ் பாராட்டு வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

கண்டிப்பான கற்பித்தல் முறையை தவிர்த்து கலந்துரையாடலுடன் கூடிய இலகு கற்பித்தல் முறையின் மூலம் தொழில்சார் கல்வியை அடிப்படையாக கொண்ட சமுதாயத்தை உருவாக்கி வரும் எமது கல்வி நிறுவனமானது பற்பல சாதனையாளர்களை உருவாக்க காத்திருக்கின்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா ஓர் திரைப்பார்வை....

சமுத்திரக்கனிக்கு பெரிய பட்ஜெட் கமர்சியல் படத்தை எடுக்கும் திறமையும் வாய்ப்பும் இருக்கும் சூழலில், கமர்சியல் திணிப்புகளை அறவே தவிர்த்து "அப்பா"வை இயக்கித் தயாரித்திருப்பதற்காகவே சமுத்திரக்கனியைப் பாராட்ட வேண்டும். படத்தின் தலைப்பே படம் என்ன மையப்புள்ளியை சுற்றி கதை அமையும் என்பதை சொல்கின்றது ஒரு நல்ல தந்தை செய்ய வேண்டியது என்ன என்பதை வைத்துக்கொண்டு, கல்வி முறையில் உள்ள பிரச்சனைகள், பிள்ளைகளின் திறமைகளை கண்டு கொண்டு அவற்றை வெளிக்கொண்டுவர உதவுவது, அவர்களை மதிப்பெண் வாங்கும் இயந்திரங்களாகப் பார்க்காமல் இருப்பது, என்பன போன்ற முக்கியமான, தேவையான நல்ல கருத்துக்களை தாங்கிவந்திருக்கும் படம் "அப்பா" இளையராஜாவின் பின்னணி இசை காட்சிகளில் மனதைத் தொடுகிறது ஆனால் நல்ல கருத்துக்கள் மட்டுமே ஒரு நல்ல படத்தைத் தந்துவிடுமா? சமுத்திரக்கனியின் முந்தைய படங்களில் நல்ல கருத்துக்களோடு, ரசிக்கத்தக்க அளவிலான பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்கும், ஒரு படைப்பாளியாக அவரது கலை நயம் வெளிப்பட்டிருக்கும். இந்தப் படத்தில் அவை இல்லவே இல்லை என்று சொல்ல முடியாவிட்டாலும் எதிர்பார்த்த அளவு இல்லை. படத்தில் சொல்லப்படும் கருத்துகள் அனைத்தும் பெருமளவில் பிரச்சார தொனியில் சொல்லப்படுகின்றன. ஆனாலும் அது ஒரு பிரச்சனையாகத் தெரியவில்லை.



கதாபாத்திரங்கள் பல இடங்களில் அளவுக்கதிகமாக எதிர்வினை ஆற்றுவதுதான் தொலைக்காட்சி சீரியல் பார்க்கும் உணர்வைத் தருகிறது. நல்லெண்ணம் மிக்க நட்பார்ந்த தந்தையாக மீண்டுமொரு முதிர்ச்சியான பாத்திரத்தை கையாண்டிருக்கிறார் சமுத்திரக்கனி. சர்வாதிகாரத் தந்தையைத் தன் உடல்மொழி மற்றும் வசன உச்சரிப்பில் சிறப்பாகக் கொண்டு வந்திருக்கும் தம்பி ராமையா, இறுதிக் காட்சிகளில் உருக்கமான நடிப்பில் நெஞ்சைத் தொடுகிறார். சமுத்திரக்கனியின் மகனாக விக்னேஸ், பாத்திரத்தை உள்வாங்கி நடித்திருக்கிறார். தம்பி ராமையாவின் மகனாக நடித்திருக்கும் ராகவ் கண்களிலேயே பயத்தையும் தயக்கத்தையும் வெளிப்படுத்திவிடுகிறார் இவர்களின் தோழியராக நடித்திருக்கும் கேப்ரியல்லா மற்றும் யுவலட்சுமி கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி முத்திரை பதிக்கிறார்கள். நசத், பல காட்சிகளில் சிரிப்பையும் சில காட்சிகளில் கண்ணீரையும் வரவைக்கிறார். மற்ற நடிகர்கள் அனைவரும் தங்கள் பங்கை சரியாகச் செய்திருக்கிறார்கள்.

தற்காலத்திற்கு தேவையான கருத்துக்களை சரியாக சொல்லியிருக்கிறார் சமுத்திரக்கனி மொத்தத்தில் 'அப்பா' பெற்றோர்களுக்கு சில நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கும் நல்ல படம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சரியான பதிலைத் தெரிவு செய்து பரிசினை தட்டிச் செல்லுங்கள்

Google இன் Project Loon திட்டம் ஆசியாவில் எந்த நாட்டிற்கு பரிசோதனைக்காக விடப்பட்டது?

A. இந்தியா

B. இலங்கை

C. மலேசியா

D. இந்தோனேசியா

உங்கள் சரியான பதிலை ASK <இடைவெளி> Option A,B,C அல்லது D <இடைவெளி>உங்கள். பெயர். முகவரி என்பவற்றை Type செய்து 77000 க்கு SMS செய்யுங்கள்

assistia

HUTCH Dialog





வெளி

எமது வாசகர்களே வவுனியா மண்ணிலிருந்து வெளிவருகின்ற எமது மண்ணின் புதிய படைப்பான "வெளி" சஞ்சிகை தங்களது கைகளில் தவழ்வதை இட்டு மனமகிழ்வு கொள்கிறோம். எமது வளர்ச்சியில் வாசகர்களாகிய தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் மற்றும் ஆக்கங்களையும் வரவேற்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.


"வெளி" செயற்பாட்டு இளைஞர்கள்
#187/10, ஆலடி வீதி.
தோணிக்கல்.
வவுனியா.
தொடர்புகளுக்கு : 024 2050 492
076 9018 359
076 7280 996


வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# facebook


















இப் பகுதியில் தங்களது ஆக்கபூர்வமான படைப்புக்களும் இடம் பெற "வெளி செயற்பாட்டு இளைஞர்கள்" எனும் முகப்புத்தகத்தை(**Facebook**) உங்கள் விருப்பத்திற்குரிய(**Like**) பக்கமாக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prop:M.Mehalan

# SANGEETHA printers

**RUBBER STAMP** இறப்பர் முத்திரைகள்

**LOW PRICES** குறைந்த விலையில்



தமிழ், ஆங்கில, சிங்கள டைப்பிங்

பில் புத்தகங்கள்

விசிட்டிங் காட்ஸ்

புத்தக பைன்டிங்

**JOB CARDS**

All Type of Printing Works



Office : 024 4545 012
Mobile : 077 8316 501

No.101,
Bus Stand Complex,
Vavuniya.

E-mail : sangeethaprinting.sl@gmail.com

# BCS INTERNATIONAL Pvt.Ltd

## Pre School – English Medium

### Child Courses

- YLE – UNIVERCITY OF CAMBRIDGE UK
- MATHS OLYMPIAD - INDIA
- SPELLING BEE - INDIA
- BRAIN CARVE - INDIA
- ELOCUTION - INDIA



#19, Vairavarkovil Road, Vairavapuliyankula, Vavuniya
024 222 2313, 077 111 0807
www.bcsinternationaledu.com bcsandrew.md@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org